**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No. 331/2026.**

**Alangayam Police Station**

**Cr.No.2/2017**

| | | |
|---|---|---|
| 1. Deposition of Witness for | : | PW 7 |
| 2.Name | : | திரு.ஜெகநாதன் |
| 3.Father's Name | : | கிருஷ்ணன் |
| 4.Village | : | வேலூர் |
| 5.Taluk | : | வேலூர் |
| 6.Calling | : | காவல் ஆய்வாளர் |
| 7.List witness | : | Lw8 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** in accordance with the provision of Act X of 1873 of the day of **11.08.2026.**

எதிரி ஆஜர் இல்லை விலக்கு மனு அனுமதிக்கப்பட்டது.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம்– 05.45 P.M

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்– 05.55 P.M

முதல் விசாரணை:–

நான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.01.2017ம் தேதி மாலை 17.00 மணிக்கு ஆலங்காயம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ஜெகநாதன்

ஆகிய நான் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து பெற்ற தகவலின் பேரில் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருந்த அருள்ஜோதி  என்பவரிடம் இருந்து பெற்றுவந்த புகார் வாக்குமூலத்தின் பேரில் கடந்த 02.01.2017ம் தேதி மாலை 17.00 மணிக்கு ஆலங்காயம் காவல் நிலைய குற்ற எண்.2/2017, U/s. 341, 294(b), 323, 324, 506(i) IPCன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் மனு ஏற்கனவே அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3. ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 02.01.2017 அன்று மாலை 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமரேசன் மற்றும் தனஞ்செயன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். பார்வை மகசர் அ.த.சா.ஆ.4. ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ.5. ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கின் சாட்சிகளான அருள்ஜோதி, வரதராஜி, விஜயலட்சுமி, சௌந்தரராஜன், குமரேசன் மற்றும் தனஞ்செயன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். பின்னர் காயம்பட்ட அருள்ஜோதி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சத்தியராஜநேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். அருள்ஜோதி என்பவரின் காயச்சான்று அ.த.சா.ஆ.6. ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக அரசு

மருத்துவமனையில் விசாரணை செய்ய வினோத், செந்தில், குமார், ரவி மற்றும் செங்கண்ணன் ஆகியோர் கும்பலாக வந்து அ.சா.1–ஐ தாக்கியதாகவும், வாணியம்பாடி மருத்துவமனையில் இருந்த அ.சா.1 அருள்ஜோதி என்பவரை விசாரித்த போது அவருக்கு சரியாக யார் யார் அடித்தார்கள் என்று சொல்லமுடியவில்லை என்றும் அதனால் செங்கண்ணன் பெயரை அவரால் கூற முடியவில்லை என்றும் கூறியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 341, 294(b), 323, 324, 506(i) IPC யிலிருந்து 147, 148, 341, 294(b), 323, 324, 506(ii) IPC யாக மாற்றம் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவு 147, 148, 341, 294(b), 323, 324, 506(ii) படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

அ.சா.1, அருள்ஜோதி என்பவரின் புகார் வாக்குமூலத்தில் ராமன் என்பவர் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் உள்ள குடும்ப பிரச்சனை பேசி தீர்ப்பதற்காக என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். சம்பவம் காலை 09.00 மணிக்கு சோமசுந்தர்ம் வீட்டு அருகே நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் 18.12.2016 அன்று மாலை 03.45 மணிக்கு தான் சிகிச்சையில் சேர்ந்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது மருத்துவரிடம் தன்னை பதினைந்து நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்று காய்ச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவமானது சோமசுந்தரம்

வீட்டருகே நடந்ததாக புகார்தாரர் சொல்லியுள்ளது குறித்து மேற்படி சோமசுந்தரத்தை நீங்கள் பட்டியல் சாட்சியாக முன்னிருத்தவில்லை என்று சொன்னால் சரிதான் எனது விசாரணையில் சோமசுந்தரம் சம்பவம் குறித்து தனக்கு தெரியாது என்று கூறிய காரணத்தினால் நான் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அ.சா.1 தன்னுடைய புகார் வாக்குமூலத்தில் 5–ம் எதிரி செங்கண்ணன் குறித்து எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் என்னுடைய மறு வாக்குமூலத்தில் 5–ம் எதிரி குறித்து குறிப்பிட்டுள்ளார். அருள்ஜோதி குடும்பத்திற்கும் ராமன் குடும்பத்திற்கும் உள்ள குடும்ப பிரச்சனையை பேசி தீர்ப்பது தொடர்பாக எதிரிகள் புகார்தாரருக்கு எதிராக பஞ்சாயத்தில் பேசிய காரணத்தினால் காழ்ப்புணர்ச்சி கொண்டு புகார்தாரர் எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரின் பொய் புகாரின் மீது சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.08.12 14:36:30 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.